Deposition of witness
(Chapter XXIII Code of Criminal Procedure
District Munsif cum Judicial Magistrate Court, Alangudi.
CC No. 202 /2018

Deposition of P.W.3

Name : சிவராஜ்
Father's Name : பால்ராஜ்
Village : ஆலங்குடி

Age : 35/2025

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 18.11.2025**

**(**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**. )**

முதல்விசாரணை

நான் தற்போது ஆலங்குடி காவல் நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். எங்கள் காவல்நிலையத்தில் பணிபுரிந்த இவ்வழக்கினை பதிவு செய்த உதவி ஆய்வாளர் கோபிநாத் மற்றும் விசாணை அதிகாரியான காவல் ஆய்வாளர் வைதியநாதன் ஆகியோர் பணி மாறுதல் பெற்று சென்று விட்டதால் இந்த வழக்கின் தன்மை கருதி ஆவணங்கள் கூடுதல் சாட்சியமாக சாட்சியம் அளிக்கிறேன். அவர்களது கையொப்பம் மற்றும் எழுத்துநடை எனக்கு நன்கு தெரியும். உதவி ஆய்வாளர் கோபிநாத் 18.06.2018 அன்று நிலைய பொறுப்பில் இருந்தபோது ஆலங்குடி அரசு மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலை பெற்று அங்கு சென்று விசாரித்தபோது விபத்தில் காயமடைந்து உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த முத்துக்குமார் என்பவர் பேச முடியாத நிலையில் இருந்ததால் அவருடைய தம்பி முருகேசன் என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று அதன்மீது நிலைய குற்ற எண்**.111/2018** இதச பிரிவு **279, 337**ன்கீழ் முதல்தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். உதவி ஆய்வாளரால் பதிவு செய்யப்பட்ட முதல்தகவல் அறிக்கை அசாஆ**.2**ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**.**

2. பின்னர் 19.06.2018 அன்று காலை 6.00 மணிக்கு சம்பவ இடம் சென்ற உதவி ஆய்வாளர் சாட்சிகள் சரவணன் மற்றும் குமார் ஆகியோர் முன்னிலையில் சம்பவத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வைமகசர் ஆவணம் தயார் செய்துள்ளார். மாதிரி வரைபடம் அ**.**சா**.**ஆ**.3,** பார்வை மகஜர் அ**.**சா**.**ஆ**.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.** பின்னர் வழக்கின் சாட்சிகள் 1 முதல் 11 வரையிலான சாட்சிகளை விசாரித்து அவர்களது

வாக்குமூலத்தினை தனித்தனியே பதிவு செய்துள்ளார். எதிரியை 20.06.2018 அன்று காரணம் கூறி கைது செய்து தக்க நிலைய பணியில் விடுவிக்கப்பட்டார்.

3. விபத்தில் காயமடைந்த முத்துக்குமார் என்பவர் இறந்துபோகவே வழக்கின் சட்டப்பிரிவுகளை இதச பிரிவுகள் 279, 337 என்பதிலிருந்து இதச பிரிவு 279, 304(ஏ)ஆக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்துள்ளார். .பின்னர் வழக்கின் கோப்பினை தனது மேல்விசாரணைக்கு பெற்றுக்கொண்ட காவல் ஆய்வாளர் வைத்தியநாதன் விபத்தில் இறந்துபோன முத்துக்குமார் என்பவரது பிரேதத்தின்மீது 25.06.2018 ஆம் தேதி காலை 11.30 மணிக்கு புதுக்கோட்டை அரசு மருத்துவமனையில் பிணவறையில் வைத்து பஞ்சாயத்தார்கள் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் பிரேதவிசாரணை மேற்கொண்டு பிரேதவிசாரணை அறிக்கை தயார் செய்துள்ளார். அந்த பிரேதவிசாரணை அறிக்கை அசாஆ**.5**ஆக குறியீடு செய்யப்படுகிறது. விபத்தில் தொடர்புடைய TN 55 S 0959 என்ற பதிவெண் கொண்ட ஹீரோ ஹோண்டா ஸ்பிளண்டர் இருசக்கர வாகனத்தினையும் மற்றும் TN 34 H 3817 என்கிற பதிவெண் கொண்ட லாரியையும், வேண்டுகோள் கடிதத்துடன் மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்விற்காக அனுப்பி வைத்து மோட்டார் வாகன ஆய்வாளர்செந்தாமரை என்பவரை விசாரித்து மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்றுள்ளார். **TN 55 S 0959** என்ற பதிவெண் கொண்ட ஹீரோ ஹோண்டா ஸ்பிளண்டர் இருசக்கர வாகனத்தினை மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ**.**சா**.**ஆ**. 6** ஆகவும்**, TN 34 H 3817** என்கிற பதிவெண் கொண்ட லாரியின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ**.**சா**.**ஆ**.7** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**.**

4. பின்னர் இறந்துபோன முத்துக்குமார் என்பவரது பிரேத்தின்மீது பிரேத பரிசோதனை மேற்கொண்ட புதுக்கோட்டை அரசு மருத்துவமனை மருத்துவர் செல்வகுமார் என்பவரை விசாரித்து அவரது வாக்குமூலத்தை பதிவு செய்து முத்துக்குமார் என்பவரின் பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றுள்ளார். பிரேதபரிசோதனை அறிக்கை அசாஆ.8ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் வழக்கு பதிவு செய்த உதவிஆய்வாளர் கோபிநாத், என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து புலன்விசாரணை முடித்து எதிரி மீது இதச பிரிவுகள் 279, 304(ஏ)ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கின் புலனாய்வு பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. இந்த வழக்கினை புலனாய்வு செய்த புலனாய்வு அதிகாரி சம்பவ இடம் செல்லாமல் சாட்சிகளை முறையாக விசாரணை செய்யாமல் பார்வைமகசர், மாதிரிவரைபடம் ஆகியவற்றை காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்துள்ளார் என்றால் சரியல்ல. புகார்தாரர் முருகேசன் சந்தேகத்தின் பேரில்

கொடுத்த புகார் வாக்குமூலத்தை சரியாக பரிசீலனை செய்யாமல் எதிரி மீது பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. முத்துக்குமார் என்பவருக்கு ஏற்பட்ட விபத்திற்கும் எதிரிக்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் எதிரியின் மீது பொய்யாக இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.